04175 - 236654 / 235295

SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

29.12.2021

# சண்முகா கல்லூரியில் பணி நியமன ஆணைகள்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின், பணியமர்த்தும் அமைப்பின் (Placement Cell) மூலம் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில், தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமைவகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்** முன்னிலை வகித்தார். கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்**, முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** மற்றும் துணைமுதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலரும் உயிர் தொழில்நுட்பவியல் துறைத்தலைவருமான பேராசிரியர் **எம்.கோபு** வரவேற்றார். சென்னை ALTRUIST INDIA நிறுவனத்திற்கு 27 மாணவர்களுக்கும், திருச்சி WINNERS INSTITUTE OF COMMUNICATIVE ENGLISH நிறுவனத்திற்கு 4 மாணவர்களுக்கும் இந்த இரு நிறுவனங்களுக்கு மட்டும் மொத்தம் 31 இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் முனைவர் **கே.சத்தியசீலன்** நன்றியுரை வழங்கினார். கல்லூரியின் அனைத்துத் துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்


AVOID
PLASTIC